2015 செப்டம்பர் 15]

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலிருந்து விருத்தாசலம் வழியாக சென்னைக்கு நான்கு வழிச்சாலை அமைக்கப்படுமென்று மத்திய அரசு 4 வருடங்களுக்கு முன்பாக அறிவித்தார்கள். இப்போது அதனுடைய நிலைப்பாடு என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா மரக் கன்றுகள் நடப்படுவதைப் பற்றியது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சையிலிருந்து விருத்தாசலம் வழியாக சென்னைக்கு செல்லும் சாலையைப் பற்றி இங்கே கேட்டிருந்தார்கள். இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்றது. ஆகவே, இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆய்வு செய்து, துரிதமாகப் பணிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள தஞ்சாவூர்-விருத்தாசலம் சாலை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கின்ற பணி தற்போது நடைபெற்று வருகின்றது. அந்தப் பணிகள் எல்லாம் முடிந்தபின்பு சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 261, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

261—

அங்கன்வாடி கட்டடம்

***52900—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், இராமாபுரம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, செங்கம் வட்டத்திலுள்ள இராமாபுரம் கிராமத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்திற்குப் புல எண் 138/1-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு வருடாந்திர செயல்பாடுகள் மற்றும் திட்டமிடல் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். இராமபுரம் கிராமத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

262—

அரசு கலைக் கல்லூரி

***38199—திரு. எம்.கே. செல்வராஜு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—